# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு
# 2010

# தமிழ்மொழி

## ஆண்டு 6

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழன் என்றொரு இனமுண்டு. தனியே அவற்கொரு ______________
   கீறிட்ட இடத்தில் இடம் பெறவேண்டிய சொல்.

   அ) மனமுண்டு  ஆ) விதமுண்டு  இ) நினைவுண்டு  ஈ) குணமுண்டு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. மக்களின் புறத்தோற்ற வளர்ச்சி

   அ) நாகரிகம்  ஆ) கொண்டாட்டம்  இ) பண்பாடு  ஈ) கலைகள்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தரப்பட்டுள்ளவற்றுள் உயர்திணையைக் காட்டும் சொல்

   அ) நீர்  ஆ) ஆசிரியர்  இ) ஓடியது  ஈ) கிளி

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. துட்டகெமுனு சூழ்ச்சி செய்து கொன்ற தமிழ்மன்னன்

   அ) செண்பகப்பெருமாள்  ஆ)பண்டாரவன்னியன்
   இ) எல்லாளன்  ஈ) சங்கிலியன்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. தன்மை முன்னிலை படர்க்கை என்பவை இதற்குள் அடங்கும்

   அ) இடம்  ஆ) திணை  இ) காலம்  ஈ) எண்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பெண் குழந்தையைத் தமிழ்ச்செல்வம் ஆகமாட்டாயா? என்று கேட்பது

   அ) ஆசிரியர்  ஆ) பாட்டன்பாட்டி  இ) பெற்றோர்  ஈ) உறவினர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. காலையில் கீழ்த்திசை வானில் கதிரவன் காலிக்கிறான். இச்சொல்லியத்தின் எழுவாய்

   அ) கீழ்த்திசை  ஆ) வானில்  இ) காலையில்  ஈ) கதிரவன்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. நாம் அயலவருடன் இப்படி வாழவேண்டும்

   அ) நல்லுறவுடன்  ஆ) தொடர்பின்றி  இ) பிரிந்து  ஈ) விருப்பின்றி

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. சித்திரமும் கைப்பழக்கம் ________________ நாப்பழக்கம். கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்

அ) பேச்சு வழக்கும் ஆ) செந்தமிழும் இ) ஏசுவதும் ஈ) புகழுவதும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. சேற்றிலே தண்ணீர் அலைந்து வர, அதன் பிறகே புள்ளு தொடர்ந்து வருமாப்போல் வருவது

அ) நாரைகள் ஆ) புட்கள் இ) இளந்தாரிமார் ஈ) உழவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பொருட்பெயருக்கு எடுத்துக்காட்டு

அ) மரம் ஆ) பள்ளி இ) நண்பகல் ஈ) கற்றல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பேரூர் என்பதைப் பிரித்தால் வரும் வடிவம்.

அ) பெருமை + ஊர் ஆ) பேர் + ஊர் இ) பேரு + ஊர் ஈ) பெரு + ஊர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. போர்த்துக்கேயர் வருகையின்போது தமிழீழத்தில் நிலவிய அரசு

அ) நாகதீப அரசு ஆ) யாழ்ப்பாண அரசு

இ) நாகர் அரசு ஈ) கண்டி அரசு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி இதற்கும் பொசியும்

அ) புல்லுக்கும் ஆ) வாழைக்கும் இ) கல்லுக்கும் ஈ) கத்தரிக்கும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய ஆண்டு

அ) 1983 ஆ) 1981 இ) 1972 ஈ) 1976

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. விளையாடினான் என்ற வினைமுற்றின் காலம்

அ) நிகழ்காலம் ஆ) இறந்தகாலம் இ) வருங்காலம் ஈ) நல்லகாலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. இவையே தமிழரது கொண்டாட்டங்கள்

அ) தைப்பொங்கல் ஆடிப்பிறப்பு ஆ) திருமணம் பிறந்தநாள்

இ) தீபாவளி வருடப்பிறப்பு ஈ) நத்தார் ரம்ழான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. இறந்தகால இடைநிலைக்கு எடுத்துக்காட்டு

அ) ட் ற் த் ப் ஆ) ட் ற் த் ந் இ) க் ட் ற் த் ஈ) ட் த் ற் ன் இன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. யாழ்ப்பாணத் தமிழரசின் கடைசி மன்னன்

அ) சங்கிலிகுமாரன் ஆ) செண்பகப்பெருமாள்
இ) சிங்கையாரியன் ஈ) வன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. இருநூறு + ஐம்பது இவற்றைப் புணர்த்தினால்

அ) இருநூறைம்பது ஆ) இருநூற்றைம்பது
இ) இருநூற்றம்பது ஈ) இருநூற்றுஐம்பது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. தாயிலும் இனியது எது என்கிறார் கவிஞர் காசிஆனந்தன்

அ) வாழிடமொழி ஆ) தமிழ்மொழி இ) கல்விமொழி ஈ) கற்றமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. கடுங்குளிர் இப்பகுசொல்லைப் பிரித்தால்

அ) கடுஞ் + குளிர் ஆ) கடுமை + குளிர்
இ) கடுங் + குளிர் ஈ) கடும் + குளிர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. அப்பாவும் நானும் சந்தைக்குச் சென்றோம். இச்சொல்லியம்

அ) வினா ஆ) விருப்பு இ) ஏவல் ஈ) கூற்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. இல்லையென்று இரப்போருக்கு இல்லையென்னாது
கேட்டதைக் கொடுப்பவன்

அ) வள்ளல் ஆ) இறைவன் இ) நல்லவன் ஈ) நண்பன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தமிழீழத்தில் வெந்நீர்க் கிணறுகள் அமைந்துள்ள இடம்

அ) கந்தளாய் ஆ) கன்னியாய் இ) கம்பளை ஈ) சிற்றூர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. **குறள்:-** வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
_______________ இலாத சொலல்.

கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சொல்

அ) பொய் ஆ) கயமை இ) தீமை ஈ) நேர்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. மெல்லின எழுத்துகளுக்கு எடுத்துக்காட்டு

அ) ங்ஞ்ண்ந்ம்ன் ஆ) க்ச்ட்த்ப்ற் இ) ய்ர்ழ்வ்ள்ல் ஈ) ட்த்ற்இன்ன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. தமிழ்மொழியில் முதலெழுத்துகளின் எண்ணிக்கை

அ) பன்னிரண்டு ஆ) பதினெட்டு

இ) முப்பது ஈ) இருநூற்றுநாற்பத்தேழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இலங்கையின் தொல்குடி மக்களான நாகர்

அ) ஆரியர் ஆ) சிங்களர் இ) அரக்கர் ஈ) தமிழர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. உடனலத்திற்கு உண்ணவேண்டியது

அ) சோற்றுணவு ஆ) சத்துணவு இ) பழவுணவு ஈ) மாவுணவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கடற்குளிப்பிற்காக மக்கள் நாடி வருகின்ற இடங்களில் ஒன்று கீரிமலை. இது ஒரு கடலோரச் சிற்றூராகும். வடதமிழீழத்தின் கிழக்குக் கடல் இந்து மாவாரியாகும். அலையெறிந்து ஆர்ப்பரிக்கும் ஆழமான கடல். ஆனால், கீரிமலைப் பகுதியில் கரையிலிருந்து 300-400 மீற்றர் தூரம்வரை கரையோரம் எங்கும் நிலத்தடிப் பாறைப் படிவு இருக்கிறது. அதனால் மண்ணரிப்பு ஏற்படாமல் கடல் ஆழங்குறைந்து காணப்படுகிறது. எனவே, இங்கே கடலாடுவதற்காக கிழமை இறுதி நாட்களில் பெருந்திரளாக மக்கள் கூடுவார்கள். கடலில் இறங்கிக் குளிக்க அஞ்சுபவர்களுக்காக கரையில் ஓர் கேணி கட்டியுள்ளனர். அக்கேணிக்கு கடல் நீர் வருவதற்காக ஒரு கட்டுக் கால்வாய் இருக்கிறது. இந்தக் கேணியிலும் கடலாடலாம்: இது தவிர, மிகப் பண்டைக் காலத்துச் சிவன் கோவிலான நகுலேசுவரம் கோவில் இங்கே கடற்கரையில் உள்ளது. கீரிமலையில் சமயத்துடன் தொர்புடைய நன்னீர் அருவியொன்றும் உள்ளது. அந்த அருவியில் குளித்தால் மேனி நோய்கள் தீரும் என்று பழங்காலம் முதலே நம்புகின்றனர். எனவே, கடலாடல், அருவியாடல், இறைவழிபாடு ஆகிய கரணியங்களால் கீரிமலை சுற்றுலாத் தலமாக விளங்கியது.

1. தமிழீழத்தின் கிழக்குக் கடல் எது?

 ____________________________________________

 ____________________________________________

2. கடற்குளிப்பிற்காக மக்கள் நாடி வருகின்ற கடலோரச் சிற்றூர் எது?

 ____________________________________________

 ____________________________________________

3. கீரிமலையில் உள்ள பண்டைய சிவன்கோவிலின் பெயரென்ன?

 ____________________________________________

4. கடலில் இறங்க அஞ்சுபவர்கள் கடனீரில் குளிப்பதற்கு அங்குள்ள வாய்ப்பு என்ன?

 ____________________________________________

 ____________________________________________

5. கீரிமலையில் உள்ள நன்னீர் அருவியின் சிறப்பு என்ன?

 ____________________________________________

 ____________________________________________

(புள்ளிகள் 10)

## 3. பாடநூல் வினா- ஏழினுள் ஐந்திற்கு மட்டும் முழுவிடை எழுதுக.

1. பண்பாடு என்றால் என்ன? விளக்குக.

2. மூட ஆமை என்ற பாடற்கதை கூறும் அறிவுரை என்ன?

3. இலங்கை விடுதலை பெற்றபின் சிங்கள அரசுகளால் தமிழ்மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் யாவை?

4. கொண்டாட்டங்கள் பேணும் மாந்த (மனித) விழுமியங்கள் யாவை?

5. இபன் பற்றுற்றா என்ற செலவரின் (பயணியின்) குறிப்புகளிலிருந்து அறிவது எவை?

6. பாரி மகளிர் படைத்த உணவு எப்படி இருந்தது என்று ஔவையார் கூறுகிறார்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

7. வீட்டுத் தோட்டத்தினால் நாம் அடையக்கூடிய பயன்கள் யாவை?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 10)

## 4. பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

தென்திசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்குது அடடா!
அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்
குன்றெடுக்கும் பெருந்தோளான் கொடைகொடுக்கும் கையான்
குள்ளநரிச் செயல்செய்யும் கூட்டத்தின் கூற்றம்
என்தமிழர் மூதாதை என்தமிழர் பெருமான்
இராவணன் காண் அவன் நாமம் இவ்வுலகம் அறியும்
வெஞ்சமரில் சாவுவர நேர்ந்தாலும் சூழ்ச்சி
விரும்பாத பெருந்தகையை நான்மறைகள் தன்னை
சஞ்சரிக்கும் நாவானை வாழ்த்துகின்ற தமிழர்
தமிழரென்பேன் மறந்தவரைச் சழக்கரெனச் சொல்வேன்
(கூற்றம் - யமன். வெஞ்சமர் - கொடிய சண்டை. சஞ்சரிக்கும் - உலவும்)

1. கவிஞருக்குத் தென்திசையைப் பார்க்க ஏன் சிந்தை பூரிக்கிறது?

______________________________

______________________________

2. இராவணன் தன் புகழை எங்கெல்லாம் பரப்பினான்?

______________________________

______________________________

3. இராவணன் யாருக்குக் கூற்றம்?

______________________________

______________________________

4. இராவணன் எத்தகைய பெருந்தகை?

______________________________

______________________________

5. இராவணன் எத்தகைய தோளும் கையும் உடையவன்?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

## 5. அனைத்து இலக்கண / மொழியியல் வினாக்களுக்கும் விடை தருக.

1. சொற்களுக்கு எதிர்ப்பொருள் தருக.

அ) அண்மை ______________ ஆ) வளர்தல் ______________

இ) சிறுமை ______________ ஈ) ஆக்கல் ______________

உ) வன்சொல் ______________ ஊ) வினா ______________

2. பயிர் விளையத் தேவையான மழையைக் கதிரவன் தருகிறான்.
இச்சொல்லியத்தின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளைத் தருக.

எழுவாய்: ______________

பயனிலை: ______________

செயப்படுபொருள்: ______________

3. காலம் எத்தனை வகைப்படும்? அவற்றை எடுத்துக்காட்டுடன் தருக.

______________

______________

______________

4. தொடர்ச்சொல்லியம் ஒன்று எழுதுக.

______________

______________

______________

5. உயிரெழுத்துகள் எத்தனை? அவற்றைக் குறில், நெடில் எனப் பிரித்து எழுதுக.

______________

______________

______________

(புள்ளிகள் 15)

6) பந்தியைத் தமிழ்மொழிக்கு மாற்றுக.

We must do physical exercise daily. By doing physical exercise body get strengthen. Illnesses are prohibited. By physical exercise mind gets happiness too. This is essential for a healthy life. Daily walking for a short distance is a great physical exercises.

Vi må trene hver dag. Når vi trener blir kroppen i bedre form. Dette hindrer sykdommer. I tillegg føler man seg også glad innvendig. Dette er livsviktig for å leve et godt liv. En kort spasertur hver dag er en av de beste treningsformene.

Vi skal lave motion hverdag. Ved at lave motion bliver kroppen stærk. Sygdomme forhindres. Af motion bliver ens indre glad. Dette er nødvendigt for vores sunde liv. Hvis bare man går lidt hver dag vil det være en god motion.

Man sollte jeden Tag Körperübungen machen. Wenn man Körperübungen macht, bekommt der Körper Kraft. Dieses verhindert Erkrankungen. Durch Körperübungen erfreut sich auch die Seele. Dieses ist für ein gutes Leben unverzichtbar. Jeden Tag eine kleine Strecke zu gehen ist eine gute Körperübung.

Nous devons faire de l'exercice physique au quotidien (tous les jours). En faisant de l'exercice physique, nous sommes en meilleure forme. Cela évite les maladies et essentielle pour une vie saine. Une marche sur une courte distance, au quotidien, est un exercice physique

(புள்ளிகள் 05)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

7. கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

1. தமிழர் பண்பாடு.

2. மாமன்னன் எல்லாளன்.

3. வன்னி உறவுகளுக்கான நாம் என்ன செய்வோம்.

4. நான் கலந்து கொண்ட பள்ளி ஆண்டு விழா.

(புள்ளிகள் 20)